**O.S.No. 334/2007**

**PW1 : புவனேஷ்வரி** தேதி 20.01.2026

**வாசா 1 மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2 ம் பிரதிவாதி டெக்ஸ்டைல் மில் தற்போது இயங்கி வருகிறதா என்றால் இல்லை. அது எப்போது நிறுத்தப்பட்டது என்றால் எனக்கு சரியாக ஞாபகத்தில் இல்லை. மேற்படி மில்லில் நானும் ஒரு இயக்குனர் தான். எப்போது அந்த மில் மூடப்பட்டது என்று ஞாபகத்தில் இல்லை. 2 ம் பிரதிவாதி மில்லை வழக்கறிஞர் கோபாலகிருஷ்ணன் என்பவர் நடத்தியதில் ஏற்பட்ட குளருபடியால் தான் இந்த வழக்கு ஏற்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் கோபாலகிருஷ்ணன் செயல்களை கண்டித்து ஆட்சேபணை செய்து காவல் துறையிலோ அல்லது கம்பெனி போர்டிலோ அல்லது சிட்டி யூனியன் பேங்கிலோ புகார் கொடுத்தேனா என்றால் இல்லை இந்த வழக்கை தான் தாக்கல் செய்திருக்கிறேன். கோபாலகிருஷ்ணன் நிர்வாகம் செய்ததற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் கைவசம் உள்ளது. கம்பெனி மூடியபிறகு அபிசியல் லிக்குடேட்டரிடம் கம்பெனி சொத்துகள் ஒப்படைக்கப்பட்டதா என்றால் ஒப்படைக்கப்பட்டது. அதற்கான ஆவணம் என் வசம் உள்ளது. ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஸ்கைவி கூட்டு நிறுவனத்தை நாங்கள் நடத்தி வந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வழக்கு தாக்கல் செய்யும் போது தாவாவின் விவரம் எனக்கு தெரியும். தாவாவிற்குரிய ஆவணங்களை கொண்டு பிராதை தயாரித்தேனா என்றால் ஆமாம். 3 மற்றும் 4 பிரதிவாதிகளாக என் கணவரின் அண்ணன்கள் சின்னசாமி மற்றும் பழனிசாமி IP மனு தாக்கல் செய்திருப்பதாக சொல்லியிருக்கிறேன். மேற்படி IP மனு விவரத்தை இவ்வழக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை.

கோபாலகிருஷ்ணன் ,சண்முகம் , பாலசுப்பிரமணியம் ஆகியோர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்கிறேனா என்றால் இல்லை வங்கியை தான் தரப்பினராக சேர்த்தேன். 2 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு 1 ம் பிரதிவாதியின் வங்கியில் தான் கடன் பெறப்பட்டது என்றால் சரிதான். அதற்கான அடமான ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டதா என்றால் ஆம் கொடுக்கப்பட்டது. அந்த ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. DRT ல் 1 ம் பிரதிவாதி வங்கி வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கில் ஆஜராகி எதிர் வாதம் செய்தேன். அந்த வழக்கின் தீர்ப்பின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதில் 2 ம் பிரதிவாதிக்காக வாங்கிய கடனை திரும்ப செலுத்தும் படி தீர்ப்பான விவரம் தெரியும். அந்த தீர்ப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேல்முறையீடு செய்திருக்கிறேன். மேல்முறையீடிற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு கம்பெனி சம்மந்தமாக வழக்கு தான். 2 ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக 1 ம் பிரதிவாதி வங்கியில் இருந்து வாங்கிய கடனை திரும்ப செலுத்தாமல் ஏமாற்றுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. ஈரோட்டில் பட்டேல் வீதியில் உள்ள சொத்தின் பேரில் 1 ம் பிரதிவாதி வங்கி நடவடிக்கை எடுத்ததா என்றால் தெரியாது. பட்டேல் வீதியில் உள்ள சொத்தை அளக்க லிக்குடேட்டர் வந்தார். அதன் பின்பு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் சரியல்ல முன்னரே தாக்கல் செய்து விட்டேன். 1998 – 1999 வரை ரூ. 1 கோடி லாபம் வந்தததை காட்டும் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 1998 – 1999 காலகட்டத்தில் Job Work என்று ரூ.88 லட்சம் கேட்டிருக்கிறேன். அதற்குண்டான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. லாரியின் பதிவு எண் மற்றும் அது எந்த வகையான லாரி என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் சரியல்ல. மிசினரி வகையில் ரூ.56 லட்சத்தி 50 ஆயிரம் என்று

சொல்லியிருக்கிறேன் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. salary account Rs.2 லட்சத்தி 20 ஆயிரம் என்று சொல்லியிருக்கிறேன். 1998 -99 ல் ரூ.2 கோடியே 54 லட்சத்தி 50 ஆயிரத்திற்கு லாபம் வந்த போது 1ம் பிரதிவாதியின் கடனை செலுத்தி இருக்கலாம் என்றால் 2ம் பிரதிவாதி நிறுவனம் என் பொறுப்பில் இல்லை என்பதால் செலுத்தவில்லை. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் 2 பிரதிவாதி நிறுவனத்தை நிர்வாகம் செய்து வந்ததால் அவர்களுக்கு தான் தெரியும் என்று சொல்கிறேன். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. 2004 ம் வருடத்தில் சொத்துகள் என் கணவர் பெயரில் இருந்தது அந்த சொத்துகள் அந்த காலகட்டத்தில் பல லட்சம் போகும் என்றால் சரிதான். அதற்குரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் தெரியாது. இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அதிகார வரையறை இல்லை என்றும் கம்பெனி சட்டத்தின் படி National company law tribunal ல் தான் வழக்கை தாக்கல் செய்ய முடியும் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. கம்பெனியின் நிர்வாகத்தில் குறைபாடு ஏற்பட்டாலோ பங்குதாரர்களுக்கு குந்தகம் விளைவித்தாலோ அல்லது இயக்குனர்களுக்கு குந்தகம் விளைவித்தாலோ Indian National company law tribunal முறையீடு செய்ய வேண்டும் என்றும் சொன்னால் அது எனக்கு தெரியாது. வழக்கு சங்கதிகளுக்கு எவ்வித முகாந்திரம் இல்லை என்பதாலும் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.